Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 24 இதழ் - 7 ஜூலை 2011

தனிப் பிரதி ரூ. 8/-



# திருமறை தியானம்
## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை | TV | ஞாயிறு | காலை | 5:30 – 6.00 |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7.00 – 7.15 |
| தமிழன் | TV | சனி | காலை | 7.15 – 7.30 |

இந்நிகழ்ச்சிகளைப் பார்த்து
உண்மை சத்தியத்தை
அறிந்து கீழ்ப்படியுங்கள்.

## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை .................................... 1
2. கிறிஸ்துவுக்குள் .................................... 9
3. பெண்கள் பகுதி .................................... 13
4. வாலிபர் பகுதி .................................... 15
5. சிறுவர் பகுதி .................................... 18
6. துருவின் சாட்சி .................................... 20
7. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ......... 24
8. மன்னிப்பும், ராஜ்யமும் .................................... 29


### வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசத்தை கண்டிப்பாக எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 24 JULY - 2011 Issue - 7

ஆசிரியர் உரை

# யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன்

மானிடராகப் பிறந்த எல்லோருக்கும் பொதுவான விருப்பம் ஒன்று உண்டு. அது, இப்பூமிக்குண்டான வாழ்க்கையில் தான் ஒரு "பெரிய ஆளாக" இருக்க வேண்டுமென்னும் ஆசை அல்லது குறைந்தபட்சம் தன்னை ஒரு பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள வேண்டுமென்ற ஆசை. இக்காரியத்தில், விதி விலக்கு என்பதற்கு நாம் விலக்கு அளிப்பது தான் நியாயமாக இருக்கும். ஏனெனில், இவ்வித ஆசை அற்றவர் ஒருவருமில்லை என்பது தான் யதார்த்தம். ஆம், நான் அவனை விடப் பெரிய ஆளாக இருக்க வேண்டும், இவனை விடப் பெரிய ஆளாக மாற வேண்டும் என்று தான் ஏறக்குறைய எல்லோரும் எண்ணுகின்றனர். தன்னுடைய இந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக மனிதன் படும் பாடுகளுக்கும், மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும், போடும் வேடங்களுக்கும் அளவே இல்லை. ஆனால், விண்ணிலிருந்து மண்ணுக்கு இறங்கி வந்த இயேசு ஆண்டவர், இப்படிப்பட்ட சீரழிவுகள் எதுவுமில்லாமலே, ஆதி முதல் உலகத்தில் பிறந்த எல்லா மனிதர்களிலும் சிறந்தவனாக இருப்பவனைக் காட்டிலும், ஆளாக ஒருவன் இருக்க முடியும் என்று அறிவிக்கிறார்.

அப்படியானால், இங்கே எழும் கேள்வி, உலகத்திலே பிறந்த எல்லோரைக் காட்டிலும் சிறந்த மனிதன் யார்? என்பது. இக்கேள்விக்கு விடை காண நம்முடைய அறிவை அளவு கோலாகப் பயன்படுத்தாமல், இயேசு ஆண்டவரிடமே செல்லுவோம். அவன் "ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப்

பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் இல்லை" என்று கூறியுள்ளார் (மத். 11:11) பிதாவாகிய தேவனால், ஆதியிலே படைக்கப்பட்ட ஆதாம், ஏவாள் தவிர்த்து உலகில் பிறந்த ஏனைய எல்லோருமே ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர்களே. இயேசு ஆண்டவரின் கூற்றுப் படி இவர்கள் எல்லோரைக் காட்டிலும் பெரியவன் - யோவான் ஸ்நானன். அதாவது, உயிரோடு எடுத்துக் கொள்ளப்பட்ட ஏனோக்கு-எலியா, நீதிமானாகிய நோவா, உத்தமனும் சன் மார்க்கனுமாகிய யோபு, விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் தேவனுடைய வீட்டிலெங்கும் உண்மையுள்ளவனாகக் காணப் பட்ட மோசே, என் இருதயத்துக்கேற்றவன் எனச் சொல்லப்பட்ட தாவீது ராஜா, ஞானிசாலமோன், தீர்க்கன் தானியேல் என்ற வேதாகமத்தின் பக்கங்களில் போற்றப்பட்டிருக்கும் எல்லாரைக் காட்டிலும் யோவான் ஸ்நானன் பெரியவன். ஒருவேளை, அது எப்படி என்ற கேள்வி உள்ளூர நமக்குள் எழுந்தாலும், இயேசு ஆண்டவர் இந்த உண்மையைப் பகிரங்கப்படுத்தியிருப்பதால் நாம் ஏற்றுத் தான் ஆகவேண்டும்.

இங்கே, நமக்குள் எழுக்கூடிய இன்னொரு கேள்வி உண்டு அது, எப்படி இந்த யோவான் ஸ்நானன் சிறப்புக்குரிய இவர்க ளெல்லாரைக் காட்டிலும் சிறந்தவன்? என்பது. இக்கேள்விக்கு விடை காண நாம் ஆவியானவரின் வார்த்தைகளிடம் தான் செல்ல வேண்டும். அவைகளில், யோவான் ஸ்நானன் பெரியவன் தான் என்பதற்குக் குறைந்தது மூன்று காரணங்களை நாம் காண முடியும்.

முதலாவது, யோவான் ஸ்நானன் ஒரு மகத்தான மனிதன் மகத்தானவன் என்று ஒருவரை நாம் சொல்லும்போது, அவர் சிறப்புகள் பலவற்றுக்குச் சொந்தமானவராகவும், எல்லோரைக் காட்டிலும் வேறுபட்டவராகவும் இருக்க வேண்டும். இத்தனித்தன் மை, இந்த ஸ்நானனுக்கு இருக்கிறதா என்று கவனிப்போம் அவன் 1. தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாகக் காணப்பட்ட சகரியா - எலிசபெத் தம்பதியினருக்குப் பிறந்துள்ளான் (லூக் 1:6). 2. தேவ தூதனாலே அறிவிக்கப்பட்டுப் பிறந்துள்ளான் (1:11) 3. தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பட்டிருந்தான் (1:15) 4. இயேசுவின் தாயாகிய மரியாளின் வாழ்த்துக்களை கர்ப்பத்தில் இருக்கும் போதே பெற்றுள்ளான் (லூக். 2:4) 5. உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றும் எல்லோரைக் காட்டிலும் வேறுபட்டிருந்தது (மத். 3:4; லூக். 1:80) 6. எந்த அதிகாரத்துக்கும் பயப்படாமல் தன் இறைபணியைச் செய்தான் (மத். 14:3,4). இவைகளெல்லாம், இவன் ஒரு மகத்தான மனிதன் என்பதற்குச் சான்று பகர்கிறதாகவே உள்ளது.

இரண்டாவது, நீதித் தம்பதிக்குப் பிறந்த மகத்தான மனித னாகிய இந்த ஸ்நானன் ஒரு மகத்தான தீர்க்கதரிசி. பழைய ஏற்பாட்டின் காலத்தில் நாம் பல தீர்க்கதரிசிகளைப் பார்க்கி றோம். ஆனால், அவர்களெல்லாரிலும் காணப்படாத ஒரு சிறப்ப

இவனிடம் தெரிகிறது. ஆம், "மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது". என்னும் தன் ஒற்றை வரிப் பிரசங்கத்தின் மூலம், "எருசலேம் நகரத்தார் யாவரையும், யூதேயா தேசத்தார் அனைவரையும்" தன்பால் ஈர்த்துவிட்டான் (மத். 3:2-5). அப்படி இவனை நாடிச் சென்றவர்கள், ஏதோ வேடிக்கைக்காகச் செல்லாமல், ஞானஸ்நானத்திற்குத் தாங்களாக வே தங்களை ஒப்புக் கொடுக்குமளவு இவன் காரியங்கள் இருந் திருக்கிறது! (மத். 3:6). இச்சிறப்பை நாம் இலேசாக எடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில், ராஜ்யமாகிய சபை குறித்துப் பிரசங்கம் செய்து, ஒருவனை புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்குள் ளாக வழி நடத்துவதற்கு என்ன பாடுபட வேண்டியிருக்கிற தென்று ஊழியம் செய்பவர்களுக்கு நன்றாகவே தெரியும். அத்தோடு தன்னை நாடி வருகிற எல்லோரையும் பிரியப்படுத்த வேண்டுமென நினைத்து, தன் செய்தியின் சாரத்தைக் குறைத்துப் பிரசங்கிக்காமல் எச்சரித்துப் புத்தி சொன்னான். "விரியன் பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பிக் கொள்ள உங்களுக்கு வகை காட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்" என்றான். ஆக இந்த ஸ்நானகன் ஒரு மகத்தான தீர்க்கதரிசி தான் என்பதற்கு இவைகளெல்லாம் போதாதா?

மூன்றாவது, இந்த ஸ்நானகனுடைய மகத்துவத்திற்கு மெருகு சேர்க்கும் இன்னுமொரு சிறப்பு அலாதியானது. வேதாக மத்தின் எந்த ஒரு தீர்க்கதரிசிக்கும் இப்பாக்கியம் கிடைக்க வில்லை. ஆம், இழந்து போன மனிதனை இரட்சிக்கும்படியாக வந்த இயேசு பெருமானுக்கு பாதைகளைச் செவ்வைப்படுத்தும் பணியைச் செய்தான் (மத். 3:3,11:9-10). அதுவும், தனக்கென எந்த ஒரு மரியாதையையும் தேடாமல் செய்தான். ஆம், இவன் தன் ஊழியத்தின் உச்சத்தில் இருந்தபோது, "அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்" (யோவான் 3:30) என்று பகிரங்கப் படுத்தியதோடு, இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்று அறிவித்து, ஜனங்களை அவர் பின்பாகச் செல்லத் தூண்டினான் (யோவான் 1:29-31). அத்தோடு, இயேசு ஞானஸ்நானத்தின் மூலம் எல்லா நீதியையும் நிறைவேற்றுவ தற்குத் (மத். 3:15) துணை நிற்பவனாகவும் இருந்தான். இப்படிப்பட்ட சிலாக்கியம் பெற்ற மனிதன் உலகில் யார் தான் உண்டு?

ஆகவேதான், இயேசு ஆண்டவர், "ஸ்திரீகளிடத்தில் பிறந்த வர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவ னும் எழும்பினதில்லை" என்று சொன்னார். ஏதோ, யோவானைப் புகழ்வதற்காக அப்படிச் சொல்லவில்லை. இயேசுவானவர், யோவானை இப்படி மேன்மைபடுத்திச் சொன்னதோடு அவ்வச னத்தை முடிக்காமல், தொடர்ந்து அவர் வெளிப்படுத்தின வார்த் தைகளைத் தான் நாம் இம்மாதத்திற்காக பார்க்கப் போகிறோம். "....ஆகிலும், பரலோக ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன்

அவனிலும் (யோவான் ஸ்நானனிலும்) பெரியவனாயிருக்கிறா னென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்" என்றார் (மத். 11:16).

அதாவது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் இல்லை. ஆயினும், அவனைக் காட்டிலும் ஒருவனால் பெரியவனாக இருக்க முடியும் என்கிறார். இது, கேட்பதற்கு ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. ஆனால், இயேசு ஆண்டவர் ஒன்றை "மெய்" என்று சொல்லும் போது, அது "பொய்" ஆகுமா? ஆகாது, ஆகவே, ஆகாது! அப்படியானால், யாரால் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவனாக இருக்க முடியும்? "பரலோக ராஜ்யத்தில் சிறியவனாக இருப்பவன்" யோவானைப் பார்க்கிலும் பெரியவனாக இருப்பானாம்! இங்கே கவனியுங்கள், பரலோக ராஜ்யத்தில் பெரியவனாக இருப்பவன் என்று இயேசு சொல்லவில்லை, பரலோக ராஜ்யத்தில் சிறியவன் என்று கூறுகிறார். தேவனுடைய பார்வையும், கிறிஸ்துவின் பார்வையும் எப்போதும் சிறியவர்கள் பேரில் தான் பட்சமாக இருக்கிறது.

நாம் எல்லோரைப் பார்க்கிலும் பெரியவர்களாக இருப்பதற்கான வழியை இயேசு நமக்குக் காண்பித்துள்ளார். அப்படிப் பெரிய ஆளாக மாற, முதலாவது நாம் பரலோக ராஜ்யம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு, அதற்குள்ளாகப் பிரவேசிக்கும் வழியைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த இரண்டையும் அறிந்து, அதற்கானவைகளைச் செய்யும் போது தான் நாம் பெரியவர்களாக மாற முடியும்.

சரி, இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கும் வார்த்தைகளுள் ஒன்று "பரலோக ராஜ்யம்" என்பது. "பரலோகம்" என்பதற்கும் "பரலோக ராஜ்யம்" என்பதற்கும் வேறுபாடு தெரியாமல் கிறிஸ்தவம் தவறான பாதையில் போய்க் கொண்டிருக்கிறது. யோவான் ஸ்நானனும், இயேசுவும் சமீபமாயிருக்கிறது என்று போதித்த ராஜ்யம், பரலோகம் அல்ல. மாறாக, ராஜ்யமாகிய "சபை" (மத். 16:18,19). இது ஆவிக்குரிய ராஜ்யம் (ரோமர் 14:17). இந்த இராஜ்ஜியம் ஆகிய சபை, கடைசி நாட்களில் (முதல் நூற்றாண்டுக் காலத்தில்) ஏற்படும் என்று ஏசாயா தீர்க்கனும் (ஏசா. 2:2-4). ரோம ராஜாக்களின் நாட்களில் உண்டாகும் என்று தானியேல் தீர்க்கனும் திட்டமாக முன்னறிவித்துள்ளார்கள் (தானி. 2:44). இந்த ராஜ்ஜியம் பெலத்தோடே வருமென்று இயேசுவும் தன் ஊழியத்தின் நாட்களில் கூறினார் (மாற்கு 9:1). இந்த ராஜ்ஜியத்தின் ஆரம்பத்தை அப். 2-ம் அதிகாரத்தில் நாம் காணலாம். அப்போஸ்தலன் பவுல், கொலோசெ பட்டணத்துக் கிறிஸ்தவர்

களுக்கு ஆவியின் ஏவுதலாலே எழுதும்போது, அவர்கள் ராஜ்ஜியத்தின் புத்திரர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார் (கொலோ 1:13). ஆக, இயேசு ஆண்டவர் மத். 11:11-ல் பேசின ராஜ்யம், பரலோகம் அல்ல. அது சபையாகிய ராஜ்யம். அந்த சபையாகிய ராஜ்யத்துக்குள் கிறிஸ்துவின் உபதேசப்படி இருப்பவனே யோவான் ஸ்நானனை விடப் பெரியவனாக இருக்க முடியும்.

அப்படியானால், இயேசு வாக்களித்துக் கட்டின அவருடைய சபையாகிய ராஜ்ஜியத்தில் நீங்கள் அங்கமாக இருக்கிறீர்களா? அப்படி இருந்தால் தான் யோவான்ஸ்நானனை விடப் பெரியவனாக இருக்கும் பாக்கியம் உங்களுக்குக் கிடைக்கும். கிறிஸ்து கட்டின சபையில் ஒருவன் அங்கமாக மாறுவதற்குப் பணம் தேவையில்லை, படிப்பு தேவையில்லை, செல்வம் தேவையில்லை செல்வாக்கு தேவையில்லை, சமுதாய அந்தஸ்தும். இயேசுவின் உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்து இரட்சிப்படைந்தால் அது போதும். அப்படி இரட்சிக் கப்படுவதற்கு ஒருவன் விசுவாசிக்க வேண்டும் (மாற். 16:16), மனந்திரும்ப வேண்டும் (அப். 2:38), இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும் (ரோமர் 10:9,10), பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் (அப். 22:16). இவைகளை ஒருவன் செய்யும் போது, கர்த்தர் அவனை ராஜ்யமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார் (அப். 2:47).

இப்படிக் கர்த்தரால் அவருடைய சபையில் சேர்க்கப்படும் ஒருவன் தான் யோவான் ஸ்நானனைவிடப் பெரியவனாக இருக்க முடியும் என்று கூறியுள்ளார். அப்படியானால், கிறிஸ்து வாக்களித்துக் கட்டின சபையில் அங்கமாக இருக்கும் ஒருவன், இயேசு கிறிஸ்துவின் கூற்றுப்படி எந்தெந்த வகையில் பெரியவனாக இருக்க முடியுமென்று இப்பொழுது கவனிப்போம்.

## I கிறிஸ்து பற்றி மேலான அறிவுடையவனாயிருப்பதினால்

கிறிஸ்து கட்டின சபையில், கிறிஸ்துவின் உபதேசப்படி நிலைத்திருக்கும் ஒருவன், இயேசு கிறிஸ்து பற்றி மேலான அறிவுடையவனாக இருப்பதால் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவனாக உள்ளான்.

எப்படியெனில், ஏரோதுவின் பாவச் செயலைக் கண்டித்ததினிமித்தம் சிறையில் தள்ளப்பட்ட யோவான், கிறிஸ்துவின் கிரியைகள் குறித்துக் கேள்விப்பட்டுத் தன் சீடரில் இரண்டு பேரை அழைத்து; வருகிறவர் நீர் தானா அல்லது வேறொருவர் வரக் காத்திருக்க வேண்டுமா? என்று அவனிடத்தில் கேட்கும்படி அனுப்பினான். (மத். 11:2,3). யோவான் ஸ்நானன் இப்படிக் கேட்டு அனுப்பினது குறித்து வேறுபட்ட கருத்துக்கள் வேத வசன விளக்கவுரையாளர்களிடம் காணப்படுகிறது. ஆனால், இயேசுவின் தெய்வீகத்தை சந்தேகித்து யோவான் இப்படிக் கேட்டு அனுப்பியிருக்க வேண்டுமென்பதற்குச் சுத்தமாக வாய்ப்பில்லை.

இப்படிக் கேட்டது, யோவானுக்கு அவருடைய ஊழியத் தின் போக்கு எப்படி இருக்கும், மேசியாவுக்கான அடுத்த கட்டப் பணிகள் எப்படி நடக்கும் என்பது பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வம் இருந்திருப்பதையே காட்டுகிறது. இன்னும், கிறிஸ்து வைப் பற்றிய முழுமையான புரிந்து கொள்ளுதல் அப்பொழுது அவருக்கு இல்லாமலிருந்ததையே ஒருவகையில் நமக்கு எடுத்துச் சொல்லுகிறதாகவும் உள்ளது.

ஆனால், புதிய ஏற்பாட்டு உபதேசப்படி கிறிஸ்தவர்களாக இருப்பவர்களுக்கு, அன்றைக்கு யோவான் ஸ்நானனுக்கு வெளிப் படுத்தப்படாத காரியங்கள், இன்றைக்கு ஆவியானவராலே வெளிப் படுத்தப்பட்டுள்ளது. சொல்லப்போனால், பொந்தெ கொஸ்தே நாளுக்கு முன்பாக, இயேசுவின் சீடர்களுக்கு வெளிப்படுத்தப் படாத காரியங்கள் கிறிஸ்தவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள் ளது. யோவான் ஸ்நானன் போன்றவர்களுக்கு அப்போது அந்த வாய்ப்பில்லை. இது குறித்து இயேசுவானவர், "இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதா யிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர் கள். சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்துக் குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்ட யாவையும் சொல்லி, வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார் (யோவான் 16:12,13) என்றார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? யோவான் ஸ்நானனுக்கு வெளிப்படுத்தப்படாத காரியங்கள், சீடர்களுக்கு வெளிப்படுத் தப்படாத காரியங்கள் கிறிஸ்து கட்டின சபையில் பெந்தெகொஸ் தே நாளுக்குப்பின் அங்கம் வகிப்பவர்களுக்குத் தெரிந்திருக் கிறது. கிறிஸ்து யார், அவர் எங்கே இருந்தார், எதற்காக பூமிக்கு வந்தார், என்ன போதித்தார், எப்படி சிலுவையில் மரித்தார், எப்பொழுது உயிர்த்தெழுந்தார், இரட்சிப்புக்கு என்ன உபதேசம் கொடுத்தார், பரிசுத்தமான பக்தி வாழ்வுக்கு எவைகளைத் தந்தி ருக்கிறார் என்று அநேக காரியங்கள் தெரிந்திருக்கிறது, அது மாத்திரமல்ல, ஸ்நானனுக்குக் கிடைக்காத "தேவனுடைய பிள்ளை" என்ற சிறப்புத் தகுதி கிடைத்திருக்கிறது. இவைகளை யெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, இயேசு சொன்னது மெய்யா அல்லது பொய்யா? நிச்சயமாகவே, கிறிஸ்து கட்டின சபையில் இருப்பவன் யோவானை விடப் பெரியவனே!

## II கிறிஸ்துவின் சபையில் அங்கமாயிருப்பதினால்

கிறிஸ்துவானவர் வாக்களித்துக் கட்டின் சபையில் அங்க மாக இருக்கும் ஒருவன், பக்தி வாழ்க்கையில் மேலான நிலையை அடைந்திருப்பதால், யோவான் ஸ்நானனைக் காட்டிலும் பெரிய வனாக உள்ளான்.

யோவான் ஸ்நானன் மகத்தானவன் என்பதில் மாற்றுக் கருத் துக்கு இடமில்லை. இயேசுவால் அந்நாட்களில் கட்டப்படவி ருந்த ராஜ்யமாகிய சபை குறித்து உரக்கக் கத்தி பிரசங்கம்

செய்தான் என்பதிலும் ஐயப்பாடு ஏதும் இல்லை. ஆயினும், அந்த ராஜ்யமாகிய சபையில் அவன் அங்கமாக இருக்கவில்லை. கிறிஸ்துவின் உபதேசத்தால் கிடைக்கும் ஆத்தும இரட்சிப்பை அடைந்தவர்களின் மேன்மை குறித்துப் பரிசுத்த ஆவியானவர், பேதுரு அப்போஸ்தலனைக் கொண்டு எப்படி விவரிக்கிறார் பாருங்கள். "*உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள். தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.* (1பேதுரு. 1:10-12) கிறிஸ்துவின் உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்தவர்களின் உன்னத நிலை குறித்து இதை விட எப்படி விளக்க முடியும்?.

ஆனால், இந்த உன்னத நிலையை யோவான் தன் வாழ்நாளில் அனுபவிக்கவில்லை. இன்னும், இதே பேதுரு ஆசிரியரைக் கொண்டு, ராஜ்யமாகிய சபையில் அங்கமாக இருப்பவர்களின் சிறப்பு குறித்து ஆவியானவர் கூறுவதைக் கேளுங்கள். "*நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்*" (1பேதுரு 2:9). யோவான் ஸ்நானன் யூத முறைமையின்படி வெறுமனே ஆசாரிய வம்சத்தைச் சேர்ந்தவனாகத்தான் இருந்தான் (லூக். 1:5). ஆனால், பரலோக ராஜ்யத்தின் புத்திரராகிய கிறிஸ்தவர்களோ "ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாக இருக்கிறார்கள்". இப்பொழுது கூறுங்கள். யார் பெரியவன்? யோவான் ஸ்நானனா? அல்லது பரலோக ராஜ்ஜிய மாகிய சபையின் அங்கத்தினனா?

இயேசு ஆண்டவர் சும்மா சொல்லவில்லை. ராஜ்யமாகிய சபையில் அங்கமாக இருப்பவன் பெரியவனே! அப்படியானால், கிறிஸ்து கட்டின ராஜ்யமாகிய சபையில் நீங்கள் அங்கமாக இருக்கிறீர்களா?

### III மகத்தான சிலாக்கியங்களை அனுபவிப்பதினால்....

கிறிஸ்துவானவர் வாக்களித்துக் கட்டின சபையில் அங்கமாக இருக்கும் ஒருவன், யோவான் ஸ்நானன் பெற்றுக்

கொள்ளாதவைகளைப் பெற்று அனுபவிப்பதினால், அவன் யோவான் ஸ்நானனை விடப் பெரியவனாக உள்ளான்.

யோவான் ஸ்நானன் தாயின் வயிற்றிலிருக்கும் போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு மாபெரும் சிலாக்கியம் பெற்றவனாக இருந்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சிலுவைக்குப் பின் ராஜ்யமாகிய சபையில் அங்கமாக இருப்பவர்களுக்குக் கிடைக்கும் சிலாக்கியங்கள் இன்னும் மேலானவை, இது குறித்து யோவான் நற்செய்தியாளன் சொல்லுவதைப் பாருங்கள். "*வேத வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற வன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை*". (யோவான் 7:38,39). இயேசு மகிமைப்படாதிருந்தபடியால் பரிசுத்த ஆவியானவரின் வரம் அப்பொழுது கொடுக்கப்படாமலிருந்தது. அப்படியானால், இயேசு மகிமைப்பட்டதற்குப் பிறகு கொடுக்கப்பட்டுள்ளது. யாருக்கு? அவரை விசுவாசித்து, அவர் பிரசங்கித்த, ராஜ்ஜியமாகிய சபையில் அங்கமாக இருப்பவர்களுக்கு!

யோவான் ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன். ஆனால், கிறிஸ்துவின் உபதேசப்படி ராஜ்ஜியமாகிய சபையில் அங்கமாக இருப்பவன், ஆவியினால் பிறந்தவன் (யோவான் 3:3-5) யோவான் தன் வாழ்க்கையை வனாந்திரத்திலும், காவலிலும் கழித்தான், ஆனால், சபையின் அங்கத்தினன் ராஜ்ஜியமாகிய சபையில் ஐக்கியப்பட்டு, சக கிறிஸ்தவர்களாகிய பரிசுத்தவான்களோடு தன் வாழ்க்கையைக் கழிக்கிறான் (ரோமர் 12:5). யோவான் ஸ்நானன் ஏரோதுவின் அதிகாரத்தின் கீழ் வாழ்ந்தான். ஆனால், ராஜ்ஜியமாகிய சபையில் அங்கமாக இருப்பவன், கிறிஸ்துவின் அதிகாரத்தின் கீழ் வாழ்கிறான் (எபே. 1:23; மத். 28:18).

இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, பரலோக ராஜ்ஜியத்தில் சிறியவனாக இருப்பவன் யோவான் ஸ்நானனை விடப் பெரியவனாக இருக்கிறான் என்று இயேசு ஒப்புக்குச் சொல்லாமல், அர்த்தத்தோடு தான் சொல்லியுள்ளார் என்பது நன்றாகவே விளங்குகிறது.

அப்படியானால், அருமையானவர்களே, நாம் இப்பொழுது செய்ய வேண்டுவது என்ன? பரலோக ராஜ்ஜியமாகிய கிறிஸ்து வாக்களித்துக் கட்டின (மத். 16:18) ஒன்றான மெய்ச் சபையில் (எபே. 4:4) நாம் ஒவ்வொருவரும் அங்கமாக இருக்கிறோமா அல்லது இல்லையா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். அப்படியில்லாமலிருந்தால், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு நம்மைச் சமூலமாக ஒப்புக் கொடுக்க வேண்டும். அப்படி ஒப்புக்கொடுத்தால், நீங்கள் ஒவ்வொருவரும் உலகில் உள்ள எல்லோரைக் காட்டிலும் பெரியவர்களே. நீங்கள் ஒரு "பெரிய ஆளாக" மாற நாங்கள் ஜெபிக்கிறோம். ஆமென்! ✝

# கிறிஸ்துவுக்குள்

## J.C. சோட்

**நா**ம் பாவமில்லாமல் பிறந்திருக்கிறோம் என்று வேதாகமம் போதிக்கிறது. நாம் குழந்தைகளாயிருக்கும் போது சுத்தமாயிருக்கிறோம், ஒன்றும் அறியாதவர்களாயிருக்கிறோம், பாதுகாப்பாக இருக்கிறோம். நாம் பெரியவர்களாகி நன்மை, தீமை அறியும் வயதை அடைந்து, தவறானதிலிருந்து சரியானதை அறிந்து கொள்ளும் நிலையை அடையும் போது பாவிகளாகிறோம் (ரோமர் 3:23). இப்போது, அப்படிப்பட்டவர்கள் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்றால் மனமாற்றப்பட்டு சிறுபிள்ளைகளைப் போல் மாற வேண்டும் (மத்தேயு 18:3).

பாவிகளாயிருக்கிற நாம் இரட்சிக்கப்பட வேண்டும். ஏனென்றால், நாம் தேவனுடைய பிரமாணத்தை மீறிவிட்டோம் (1யோவான் 3:4). பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நித்திய ஜீவன் என்பதை பவுல் நமக்கு நினைப்பூட்டுகிறார் (ரோமர் 6:23).

ஆனால், நாம் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் எப்படி தப்பித்துக் கொள்ள முடியும்? நாம் எப்படி மன்னிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டு, இரட்சிப்பு நிலைக்கு மாற்றப்பட முடியும்? நாம் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றால் அவர் நம்மை இரட்சிப்பதாக கிறிஸ்து சொன்னார் (மாற்கு 16:16). பேதுரு திரளான கூட்டத்திற்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார், அநேகர் விசுவாசிகளாகி தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறுங்கள் என்று அவர்களுக்குச் சொன்னார் (அப். 2:38). இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது (அப். 2:47).

கர்த்தருக்கு நாம் கீழ்ப்படிவதில் கடைசிபடி ஞானஸ்நானமாகும். இது உலகத்திலிருந்து நம்மை விடுவித்து கிறிஸ்துவுக்குள்ளும், அவருடைய சபைக்குள்ளும் வரச் செய்கிறது. ஞானஸ்நானத்திற்கு முன்பு, தேவனிடத்திலும், கிறிஸ்துவிலும் விசுவாசம், பாவத்திலிருந்து மனந்திரும்புதல், கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்தல் போன்றவைகள் இல்லையென்றால் வெறும் ஞானஸ்நானம் மட்டும் நமக்கு எதையும் செய்யாது. கர்த்தருடைய கட்டளையின்படி நாம் பாவங்கள் கழுவப்பட முழுக்கு ஞானஸ்நானம் பெறும் போது அந்த ஞானஸ்நானம் நம்மை இரட்சிப்பதாக நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது (1பேதுரு 3:21). தண்ணீர் நம்மை இரட்சிப்பதில்லை. ஆனால்,

நாம் கிறிஸ்துவின் சித்தத்தின்படி ஞானஸ்நானம் பெற்றிருக்கிற படியால் கிறிஸ்து நம்மை இரட்சிக்கிறார். 1பேதுரு 3:21ல் பேதுரு சொன்னது போல, ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச் சாட்சியின் உடன்படிக்கையாயிருக்கிறது.

அப்படியென்றால் அடுத்து வருகிற கேள்வி, தேவன் ஒருவரை என்ன செய்யும்படியாகக் கேட்டுக்கொண்டாரோ அதை அவர் செய்யாமல் தேவனுக்கு முன்பாக நல்மனச்சாட்சியாயிருப்பது எப்படி? நிச்சயமாகவே, இப்படிப்பட்ட காரியம் அசாத்தியமான காரியமாகும். எனவே, மனந்திரும்புகிற விசுவாசி ஞானஸ்நானம் பெறுவது அவசியமாயிருக்கிறது.

இதை வேறுவிதமாகச் சொன்னால்; ஒருவர் வசன அடிப்படையில் ஞானஸ்நானம் பெறும்போது அதாவது, தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டு, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படி வெளியே வரும் போது (ரோமர் 6:3,4) ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்கிறார் (யோவான் 3:3-5). பவுல் இவ்விதமாக விளக்குகிறார். "இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" என்று (II கொரி. 5:17).

இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும், புதிய சிருஷ்டியாவதற்கும் ஒருவர் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும், கிறிஸ்துவுக்குள் இருப்பதற்கு ஒரே வழிதான் இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:3,4).

இதைத்தான் பவுல் II கொரிந்தியர் 5:17-ல் சொல்கிறார், அந்த புதிதான ஜீவன் என்பது கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிப்பாக இருப்பதன் விளைவாகும். மறுபடியும் பவுல், நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே (கலாத்தியர் 3:26,27).

உதாரணமாக, ஒருவர் சட்டையை அணிந்தால், அவர் சட்டைக்கு உள்ளே இருக்கிறாரா அல்லது வெளியே இருக்கிறாரா? நிச்சயமாகவே அவர் சட்டைக்குள் இருக்கிறார். எனவே,

ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறும்போது, அதன் பொருள் அவர் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார், கிறிஸ்து வுக்கு வெளியே இல்லை. இதன் மூலம் ஒருவர் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறார், கிறிஸ்துவுக்கு வெளியே இல்லை.

வாழ்க்கையின் ஏதோ ஒரு காலக்கட்டத்தில் தாங்கள் இரட்சிக்கப்பட்டதாகவும், பின்பு ஞானஸ்நானம் பெற்றதாகவும் சொல்கிறவர்கள் தாங்கள் கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது கிறிஸ்துவே இல்லாமல் ஞானஸ்நானம் பெற்றதாகச் சொல்கிறார் கள். அது எப்படி முடியும்?

ஒருவர் இரட்சிக்கப்பட அவர் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டுமென்று வசனம் போதிக்கும்போது, ஞானஸ்நானம் தான் ஒருவரை கிறிஸ்துவுக்குள் இருக்கச் செய்கிறது. எனவே, ஒருவர் ஞானஸ்நானத்திற்கு முன்பு இரட்சிக்கப்படுவது முடியாத காரியம்!.

மறுபடியும், பவுல் 1கொரிந்தியர் 12:13-ல், நாம் ஒரே சரீரத் திற்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டதாகச் சொல்கிறார். கொலோசெயர் 1:18ல், அந்த சரீரம் சபை என்று சொல்கிறார். எபேசியர் 1:22,23 வசனங்கள் சரீரமான சபை என்பதைக் காட்டு கிறது, கடைசியாக, எபேசியர் 4:4ல், ஒரே சரீரம் என்பதை பவுல் தெளிவுப்படுத்தினார்.

ஒரே சரீரம் என்பது சபையானால் நாம் அந்த ஒரே சரீரம் அல்லது சபைக்குள் ஞானஸ்நானம் பெற்றிருந்தால் அந்த சபைக்குள் பிரவேசிப்பதற்கு ஒரே வழிதான் இருக்கிறது. அது அந்த ஞானஸ் நானத்தினால் தான்!

மேற்சொல்லப்பட்ட கருத்துக்களை இணைத்துப் பார்க்கும் போது நாம் ஞானஸ்நானத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது நாம் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்து கிறிஸ்துவுக்குள்ளாக வும் அவருடைய சபைக்குள்ளாகவும் பிரவேசிக்கிறோம், அதே நேரத்தில் கிறிஸ்து நம்மை தம்முடைய சபைக்குள் சேர்த்துக் கொள்கிறார்.

சரீரப்பிரகாரமான உறவில், அதாவது, ஒரு சரீரப்பிரகார மான குடும்பத்தில் நாம் பிறந்துவிட்டால், நாம் எப்போதும் அந்த குடும்பத்தில் தான் இருப்போம். குடும்பத்தில் நாம் உண்மையும், விசுவாசமுள்ள உறுப்பினராக இருந்து அதனாலுண்டாகும் நன்மைகளை அனுபவிக்கலாம், அல்லது சுதந்திரத்தை இழந்து போகத்தக்கதாக வாழலாம், ஆனால், நம் தாய்க்கும், தகப்பனுக் கும் நாம் எப்போதுமே மகனாக அல்லது மகளாகத்தான் இருப்போம். ஆவிக்குரிய பிரகாரமாகவும் இது உண்மையாயிருக் கிறது. நாம் கிறிஸ்துவுக்குள் வந்து அவருடைய சபைக்குள் அல்லது குடும்பத்திற்குள் பிரவேசிக்கும் போது, நாம் எப்போதும்

கிறிஸ்துவுக்குள் இருந்து கொண்டு அந்த ஒரே குடும்பத்தில் எப்போதும அங்கத்தினர்களாக இருப்போம். ஆனால், உண்மை யுள்ளவர்களாக இருப்போம் அல்லது உண்மையில்லாதவர்களாக இருப்போம். தேவனுடைய பிள்ளையாக நாம் மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருக்கும்போது கர்த்தர் நமக்கு ஜீவ கிரீடத்தைத் தருவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (வெளி. 2:10).

நாம் உண்மையில்லாதவர்களாக இருந்தால் இவ்வுலகில் உள்ளூர் சபையால் ஐக்கியத்திலிருந்து விலக்கப்படலாம், ஆனால், நாம் மனந்திரும்பாமல் போனால் நாம் நித்தியத்தை இழந்து போவோம் (மத்தேயு 25:46). நம் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பினால், நாம் மன்னிக்கப் பட்டு கர்த்தருக்கு சொந்தமானவர்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகளை மறுபடியும் பெற்றுக்கொள்ள முடியும். இந்த ஆவிக் குரிய குடும்ப உறவை சிறந்த முறையில் புரிந்து கொள்ள லூக்கா 15-ல் உள்ள அந்த கெட்ட குமாரனுடைய சம்பவத்தை வாசித்துப் பாருங்கள்.

**நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா?** நீங்கள் அவரு டைய சபையில் அங்கத்தினர்களாக இருக்கிறீர்களா? நீங்கள் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளையாக இருக்கிறீர்களா? அப்படி இல்லையென்றால், அது ஒரு சோகமான நிலை. நீங்கள் இழந்துபோன நிலையில் இருக்கிறீர்கள். காலம் கடப்பதற்கு முன்பாக கர்த்தரிடத்தில் வருவதற்கு அவருடைய அழைப்பை தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள். †

## கிறிஸ்தவனின் வேலை

1. அழிந்து போகும் மக்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லுதல் *(மாற்கு 16:15)*
2. விழுந்து போன கிறிஸ்தவர்களை மீட்டமைத்தல் *(யாக்கோபு 5:19,20)*
3. ஏழைகளுக்கு உதவி செய்தல் *(கலாத்தியர் 6:10)*
4. தேவனுடைய வார்த்தையை கற்றுக் கொள்ளுதல் *(2 தீமோத்தேயு 2:15)*

## பெண்கள் பகுதி

# "பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பதற்கான நான்கு எழுத்து வார்த்தைகள்"

**ரேச்சல் இராஜநாயகம்**

கர்த்தரால் ஈவாக கிடைத்த நம் பிள்ளைகளின் பய பக்தியான வாழ்க்கைக்காக, பெற்றோர்களாகிய நாம் நல்ல ஒழுக்கங்களை கற்றுக் கொடுப்பது மிக, மிக அவசியம். இம்மாதம் சில முக்கியமான வார்த்தைகளை பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பது பற்றிப் பார்ப்போம்.

**முதலாவது : வேலை Work :**

ஏதேன் தோட்டத்திலேயே சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன் ஆதாமுக்குச் செய்யும்படியான ஒரு வேலையை கொடுத்தார் (ஆதி. 2:15). அவர்கள் பாவஞ் செய்து ஏதேனிலிருந்து தள்ளப்பட்ட பின்பும், "நீ பூமிக்குத் திரும்பு மட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்" என்றார் (ஆதி. 3:19) ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவே தன்னை அனுப்பின தேவனின் கிரியைகளைச் செய்தார் (யோவா 9:4) நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்க வேண்டுமென்றால், அமைதலோடே வேலை செய்து, தங்கள் சொந்த சாப்பாட்டைச் சாப்பிட வேண்டுமென்று வேதம் (II தெச. 3:12) நமக்குச் சொல்லுகிறது. பிறர் நிழலில் சாப்பிட்டு வாழும் சோம்பேறிகளையோ, வசதி படைத்த சமுதாயத்தையோ தேவன் ஆதரிப்பது இல்லை. வேலை செய்ய மனதில்லாதவன் சாப்பிடவும் கூடாது (II தெச. 3:10) என்று தேவன் சொல்லுகிறார். வேலையைப் பற்றிய முக்கியத்துவத்தை நம் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்காமலும், வேலையில் உண்மையாயிருப்பதின் மேன்மை பற்றி கற்றுக் கொடுக்காமல் இருந்தால் அவர்கள் ஒருபோதும் தேவனுக்கு பிரியமானவர்களாக இருக்கவே முடியாது. தன் பிள்ளைக்கு சரியான வேலையை தேடிக் கொடுக்காத ஒரு தகப்பன் அவனை ஒரு திருடனாகும்படி கற்றுக் கொடுத்து விடுகிறான். பெற்றோர்களே இந்தக் காரியத்தில் நாம் தவறி விடக்கூடாது.

**இரண்டாவது : (Giving) கொடுப்பது**

கொடுத்தல் பற்றி உங்களுடைய பிள்ளைகளுக்கு கற்பித்திருக்க வேண்டும். நாம் வேலை செய்ய வேண்டுமென்பதின் ஒரு நோக்கமே குறைச்சலுள்ளவனுக்கு கொடுக்க வேண்டுமென்பது (எபே. 4:28). கர்த்தருக்கென்றும், கர்த்தரின் காரியத்திற்கென்றும் சந்தோஷமாகவும், மனமுவந்தும் கொடுக்க வேண்டுமென்று நம் பிள்ளைகள் கற்பிக்கப்பட வேண்டும் (II கொரி. 9:7). "தாராள குணம்" என்பது நம்மில் அநேகருக்கு பரம்பரையாக வராமல் நாமாக

அக்குணத்தை அடைந்துள்ளோம். நம் தாராள குணத்தை நம் பிள்ளைகள் பார்க்க வேண்டும். வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்" (20:35) என்ற இயேசுவின் போதனையை அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

**மூன்றாவது அன்பு (Love) :** அன்பில்லாத கிறிஸ்தவம் இல்லை. சக கிறிஸ்தவர்களை நேசிக்க கற்றுக் கொள்ள வேண்டும். (யோவான் 13:34). குழந்தைகள் அன்பை குடும்பத்தில் இருந்துதான் கற்றுக் கொள்கிறார்கள். குழந்தைகளாய் இருக்கும் போதே பெற்றோரைப் பார்த்து அன்பு என்ற குணத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். இந்த வகையில் நாம் பிள்ளைகளுக்குச் சொல்லித் தர வேண்டும். உன்னைப் போல் பிறனையும் நேசி (மத். 22:37-39) என்று கற்றுக் கொடுக்க வேண்டும். வாழ்க்கைப் பிரச்சனையில் இருப்பவர்களையும், நம்மை விரோதிக்கிறவர்களையும் நேசிக்க வேண்டும் (மத். 5:44) என்று கற்றுக் கொடுக்க வேண்டும். அன்பில்லாத ஒரு மனிதனின் இருதயத்தைக் காட்டிலும் மோசமானதாக எதுவும் இருக்க முடியாது. எனவே, அன்பைப் பற்றி பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுப்பது மிகவும் அவசியம்.

**நான்காவது ஜெபம் (Prayer) :** ஒருவனுடைய நலமான வாழ்க்கைக்கும், மகிழ்ச்சிக்கும் தேவை ஜெபம். கவலை, துக்கம் என்ற சாபத்திலிருந்து மீண்டு வரவும், அனைத்து சவால்களையும் சந்திக்கவும் தேவையானது கீழ்ப்படிதலுடன் கூடிய ஜெபம். நன்றியுடன் கூடிய ஜெபத்தின் மூலம் தன்னுடைய தேவைகளை தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும். ஜெபத்தின் மூலம் தேவ சமாதானத்தை அவன் பெற்றுக் கொள்ள முடியும். எவ்வளவு பெரிய ஐசுவரியம் இது? உங்களைப் பார்த்து இடைவிடாமல் ஜெபம் செய்வதை உங்கள் பிள்ளைகள் கற்றுக் கொள்ள வேண்டும் (1தெச. 5:17).

**ஐந்தாவது: (Obedience) கீழ்ப்படிதல் :** கிறிஸ்து தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டியதாய் இருந்தது. (எபி. 5:8-9). பரலோகத்தில் நம் பிள்ளைகளை நாம் சந்திக்க வேண்டுமென்றால், பிள்ளைகளுக்கு கீழ்ப்படிதலை விதைக்க வேண்டும். கீழ்ப்படில் இல்லாமல் வெறும் கிறிஸ்தவன் அன்பைப் பற்றிப் பேசுவதில் அர்த்தம் இல்லை (யோவான் 14:15). அதிகாரிகளாய் இருப்பவர்களுக்கு கீழ்ப்படிய நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். (ரோமர். 13:1). சபையில் மூப்பர்களுக்கு (எபிரெயர் 13:17) குடும்பத்தில் பெற்றோர்களுக்கு (எபே. 6:1) கீழ்ப்படிய வேண்டும்.

**ஆறாவதாக கிறிஸ்து (Lord) :**

கிறிஸ்து யார் என்று நம் பிள்ளைகள் தெரிந்திருக்க வேண்டும். இயேசுவை கிறிஸ்து என்று அறிக்கையிடாவிட்டால் அவன் இரட்சிக்கப்பட முடியாது. (ரோமர். 10:9). நம் மகன்களும், மகள்களும் தோமாவைப் போல, "**என் ஆண்டவரே, என் தேவனே**" (யோ 20:28) என்று அறிக்கை செய்ய வேண்டும்.

அன்பான பெற்றோர்களே, இந்த வார்த்தைகள் நம் பிள்ளைகள் மனதில் என்றென்றும், எப்போதும் இருக்க வேண்டும். அனுதினமும் அவர்களுக்கு விளக்கி, எடுத்துச் சொல்லி கற்றுக் கொடுப்பது நம்மேல் விழுந்த கடமை. ஆமென். †

வாலிபர் பகுதி

# எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்

**K. சேகர்,** திருப்பூர்

**வ**ண்ண வண்ண கனவுகளில் நீந்தும் வாலிபர்களே! உல்லாச மாய் சிறகடித்துப் பறக்கும் நெஞ்சங்களே! இயேசுவின் நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துகள்.

ஒரு வாகனத்தில் நூற்றுக்கணக்கான உதிரிப் பாகங்கள் இருந்தாலும் அதின் உயிராய், நாடியாய் இருதயமாய் செயல்படு வது "எஞ்ஜின்" தான். அது வாகனத்தில் மிகவும் பாதுகாப்பான இடத்தில் பொருத்தப்படுகிறது. எஞ்சின் இல்லாத நிலையில் அது வாகனம் என்ற அந்தஸ்திலிருந்து வெளியேற்றப்படுகிறது. அது போல மனுஷனுக்குள்ளும் ஆயிரம் அவயவங்கள் இருந்தாலும் இருதயம் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்று. இது சரீரத்தை இயக்கும் எஞ்ஜின். தேவன் அதை தோல், எலும்பு, சதை போன்ற வற்றால் பாதுகாத்தாலும் அதையும் தாண்டி பல்வேறு தீமைகளில் சிக்கிக் கொண்டு முழு சரீரத்திற்கும் கேடு உண்டாக்குகிறது. இருத யத்தையும் அதின் எண்ணங்களையும் பாதுகாக்க வேறு வழியே இல்லையா! என்று கேட்டால் நிச்சயம் உண்டு. அதை காவல் காக்க என்னதான் உண்டு என்ற கேள்விக்குப் பதில் உண்டு. அது என்னவென்று பார்ப்போம்.

## I. உன் இருதயத்தில் ஜீவன்

ஒவ்வொரு இதயத்திற்குப் பின்னாலேயும் ஒரு இதயம் இருக்கிறது. ஒரு மனுஷடைய நடை உடையெல்லாவற்றையும் தீர்மானிப்பது மனுஷனுடைய இருதயம். நல்ல சிந்தனைகள், கெட்ட சிந்தனைகள். நல்ல காரியங்கள் கெட்ட காரியங்கள் இவை யனைத்தையும் உருவாக்குவது மனுஷனுடைய இருதயமாயிருக் கிறது. இருதயம் எப்போதும் ஏதாவது ஒன்றில் நிறைந்து காணப் படும். அது காலியாக ஒருபோதும் இருப்பதில்லை. எந்த சிந்தனைகள் நம்முடைய இருதயத்தை நிரப்புகிறதோ அதற்கேற்ற கிரியைகள் நம்மிடத்தில் காணப்படும். நம்முடைய "இருதயம் ஒரு பொக்கிஷம்". எங்கே பொக்கிஷம் நிறைந்து காணப்படுகிற தோ அங்கே அதற்கு காவல் அதிகமிருக்கும். பொக்கிஷம் இல்லாத இடத்திற்கு காவல் தேவையில்லை. அப்படியானால் நம்முடைய இருதயம் ஜீவ ஊற்றாகிய மிகப்பெரிய பொக்கிஷம். அதற்கு மிகப்பெரிய பாதுகாப்பு தேவைப்படுகிறது. தேவன் ஜீவ விருட்சத்தின் கனியைப் பாதுகாக்க கேருபீன்களையும், வீசிக் கொண்டிருக்கும் சுடரொளிப்பட்டயத்தையும், காவலுக்கு

வைத்தார். நம்முடைய இருதயத்தையும் பாதுகாக்க இரண்டு மகத்தான கருவிகளாகிய வேதவசனம், ஜெபதியானம் என்ற காவல்களை வைத்துள்ளார். இப்படிப்பட்ட காவல் இல்லாத இருதயம் மதிலிடிந்து பாழாய்போன பட்டணம் போலிருக்கிறது. அதற்கு பாதுகாப்பே இல்லை. எப்போது வேண்டுமானாலும் பிசாசு அந்த இருதயத்தைத் தீமையில் நிரப்பலாம். எந்த திசையிலிருந்தும் அதைத் தாக்கி அழிக்கலாம் (நீதி. 25:28). எனவே, ஆவியை அடக்கி மாம்சத்தை ஒடுக்கி தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். நம்முடைய இருதயம காவல் இல்லாமி லிருக்கும் போது பிசாசு அனுமதியின்றி நம்மில் பல பாவங்களை உட்புகுத்த வாய்ப்புகள் இருக்கிறது. விபசாரம், களவு, மதுபான வெறி, களியாட்டு போன்ற தீய செயல்களில் பாவ சந்தோஷம் கண்டு கொண்டு அதிலிருந்து விடுதலை பெற முடியாமல் தவிக்க நேரிடும். ஆரம்பத்தில் இது செம்மையாய் தோன்றும்; முடிவு மரணம் (நீதி. 14:12). எனவே பிசாசு நம்மில் கொண்டுவர முயற்சிக்கும் இப்படிப்பட்ட தந்திரமான காரியங்களில் தப்பிப் பிழைக்க வேண்டுமானால் வேத வசனத்தைக் கொண்டு நம்மு டைய வழியை சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் (சங். 119:91). எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே கேடு நிறைந்த தும் திருக்குள்ளதுமாயிருக்கிறது (எரே. 17:9). பாவிகளுடைய கண்களில் சிக்காமல் விபசாரிகளின் மோக வலையில் சிக்காமல் நம்மை நாம் காத்துக்கொள்ள வேத தியானமும், ஜெப தியானமும் அவசியம். நம்முடைய இருதயம் ஆழமான கிணறு.

## II. உன் பார்வையில் ஜீவன்

கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது (லூக். 11:34). கண் நலமாயிருந்தால் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். கண் என்பதின் பொருள் பார்வை என்பதாகும். பார்வையே பாவ மல்ல. அப்படியானால், தேவன் கண் கொடுத்தது வீணாயிருக்கு மே. பார்வை எப்படிப்பட்ட உணர்வை உண்டாக்குகிறது என்பது தான் முக்கியம். நம்முடைய பார்வையில் பல்வேறு உணர்வுகள் வெளிப்படுகிறது. அன்பு, காதல், பாசம், பரிவு, இரக்கம், கருணை, ஆசை, இச்சை, ஏக்கம், வக்கிரம், உக்கிரம், கொடூரம் போன்ற உணர்வுகள் வெளிப்படக்கூடும். அவள் அழகை உன் இருதயத்தில் இச்சியாதே (நீதி. 6:25) அந்த இச்சை அவளோடு விபசாரம் செய்யத்தூண்டும். பின்பு இச்சையானது கர்ப்பம் தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும் (யாக். 1:14,15). இப்படிப்பட்ட மோசமான விளைவுகளையும், நரகாக்கினைத் தீர்ப்பினையும் நாம் சந்திக்காமலிருக்க, நமது ஆண்டவர், பாவத்தை வேர் அறுக்கும் ஓர் அற்புதமான காரியத்தை நமக்கு விளக்குகிறார் (மத். 5:28), ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் அவ ளோடு இருதயத்தில் விபச்சாரம் செய்தாயிற்று என்று சரீரத்தில்

விபச்சாரம் நடக்காமலேயே அது நேரடியாக இருதயத்தை பாதிப்படைய செய்கிறது என்று குறிப்பிடுகிறார். அருமையான உயிரை வேட்டையாடும் விபச்சாரியின் அழகை இச்சிக்க வேண்டாம். பார்வைக்கு இன்பம் புசிப்புக்கு நலம் என்று கண்டு இச்சித்ததினாலேயே பூமியில் முதல் பாவம் உண்டானது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காகவே இயேசு மாம்சத்தில் வெளிப்பட்டார். நம்மைப் போல எல்லாவற்றிலும் சோதிக்கப்பட்டார் எல்லாப் பாவத்தையும் ஜெயித்தார்.

## முடிவுரை

சகோதரனே, சகோதரியே நம்முடைய இருதயம் ஜீவ ஊற்று என்றும் நம்முடைய பார்வையில் ஜீவன் உண்டென்றும் அறிந்து பாவத்தின் வேர் அறுத்து நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாய் ஜீவிப்போம். நமது இருதயத்திலிருந்த சஞ்சலத்தையும், மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கி, சமாதானமாய் வாழ்வோம். ஆமென். †

## நாளும், நடப்பும்

1. சிறுவன் தில்ஷானை சுட்டுக் கொன்ற ராணுவ அதிகாரி கைது.
2. ஜப்பானில் நிலநடுக்கம் மாதாந்திரப் பிரச்சினையாக மாறி வருகிறது.
3. தனி மாநிலம் அமைக்க வலியுறுத்தி தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் ஒன்று திரண்டுள்ளனர்.
4. தென்மேற்குப் பருவமழை இந்தியா முழுவதும் தீவிரம்.
5. வெஸ்ட் இண்டீசில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை வென்று இந்தியா கிரிக்கெட் அணி புதிய சாதனை.
6. வெளிநாட்டு வங்கிகளிலுள்ள கறுப்புப் பண விவகாரத்தில் விசாரணை நடத்த சிறப்பு புலனாய்வுக் குழு அமைத்தது உச்சநீதிமன்றம்.

சிறுவர் பகுதி

# மேகங்களிடமிருந்து

ABEL R. NAYAGAM

எனக்கன்பான சிறு தம்பி தங்கைகளே! நாம் வாழும் தமிழகத்தில் தற்போது உள்ள சூழலில் கார்மேகங்கள் சூழ்ந்து கடும்மழை பொழிவதை நாம் எல்லோரும் காணும் வாய்ப்பிருக்கிறது. இம்மாதம், இந்த மழை காலத்தில் அனுதினம் காலையில் நாம் காணும் மேகக் கூட்டங்கள் நமக்கு என்ன ஆவிக்குரிய பாடங்களை கற்றுத் தருகிறது என்பதை கவனிப் போம்.

இயேசு கிறிஸ்து வாழ்ந்த பெலஸ்தீனா தேசத்திலே, வருட முழுவதும் சமமான சீதோஷ்ண நிலையே காணப்படும். இந்த அழகான நாட்டின் கிழக்கு திசையிலே ஒரு வனாந்தரமும், மேற்கு திசையிலே மத்திய தரைக்கடல் பகுதியும் அமைந்துள்ளது. இந்த கடலிலிருந்து வருகின்ற காற்று ஈரப்பதத் தோடு நாட்டை நோக்கி வீசு கிறது. இந்தக் காற்று பெரிய மழை "மேகங்களை" உருவாக் குகிறது. சரி, இப்போது நாம் பாடத்திற்குள்ளாக செல்வோம், வாருங்கள்! ஆம்! தேவன், வேதாகமத்தை எழுதியவர்களை கொண்டு இந்த மேகங் களின் மூலம் சில. ஆவிக்குரிய விசேஷமான உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். அதிலே சிலவற்றை நாம் பார்ப் போம்.

**முதலாவதாக**

பழைய ஏற்பாட்டில், பல முறை மேகங்கள் நம தேவனின் மகிமையை காண்பிக்கிறதற் காகவும், அவர் இருக்கிறார் என்று தெளிவுபடுத்துகிற சின்னமாகவும் பயன்படுத்தப்பட்டி ருக்கிறது. இக்கருத்தை பற்றிய தான வேத உதாரணத்தைப் பார்ப்போம். உதாரணமாக, தேவன் மோசேயிடம் என்ன கூறுகிறார் தெரியுமா? வேதாகமத்தை கையில் எடுத்து விட்டீர்களா? யாத். 19:9 எடுத்து படியுங்கள். மோசே "நான் உன்னோடே பேசும் போது, ஜனங்கள் கேட்டு, உன்னை என்றென்றைக்கும் விசுவாசிக்கும்படி, நான் கார்மேகத்தில் உன்னிடத்தில் வருவேன்" என்று சொல்லுவதைப் பார்க்கிறோமல்லவா? ஆம், தேவன் எபிரெய மக்களுக்கு பத்து கட்டளைகளை கொடுக்கிறபோது தேவன் இடிகளையும், மின்னல்களையும் வரப் பண்ணினார். இது நம் தேவனின் மகத்தான வல்லமையை எடுத்துக் காட்டியது. இதிலிருந்து நாம் என்ன கற்றுக் கொள்கிறோம்? "தேவன் நம் கனத்திற்கு பாத்திரராய் இருக்கிறார்".

**இரண்டாவதாக**

சரி மேகங்கள் இன்னும் என்ன கருத்துக்களை கற்றுத் தருகின்றன. பாருங்கள், மேலும் சிந்திப்போம்!

நாம் முன்னே பார்த்த பெலஸ்தீனா தேசத்திலே மேகங்கள் பொதுவாக அதிகாலையில் தோன்றி வெது வெதுப்பான மதிய பொழுதிலே கலைந்து போம். இந்த இயற்கை நிகழ்ச்சி நமக்கு என்னென்ன கருத்து உணர்த்துகிறது? சற்று ஆழ்ந்து சிந்தித்தால், அது "காரியங்கள் எவ்வளவு சீக்கிரமாய் கடந்து போகும்" என்று உணர்த்துகிறது. இப்பொழுது யோபுவை உதாரணமாக எடுத்துப் பாருங்களே.அம்மாமனிதன் பெரும் ஆஸ்தியை உடையவன், அதாவது சீமான். ஆனால், தேவன் அவனை சோதிக்க சாத்தானுக்கு அனுமதி கொடுத்தார். அதன் விளைவாக என்ன நடந்தது தெரியுமா? அவனுடைய எல்லா சொத்துக்களும் அழிந்து போயின. அவன் என்னவென்று புலம்பினான் தெரியுமா? வாசியுங்கள் (யோபு 30:15).

என் சுகவாழ்வு "மேகத்தைப் போல் கலைந்தது" என்று இதன் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் பாடம் என்ன? இதை இயேசு கிறிஸ்துவே புதிய ஏற்பாட்டில் சொல்லி விட்டார். (மத். 6:19) ஆம், பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம். பின்னே எங்கே சேர்த்து வைப்பது? என்றா கேட்கிறீர்கள்? அதையும் அவரே சொல்லி விட்டார் தொடர்ந்து அந்த பகுதியை படியுங்கள். பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் என்றார்.

**கடைசியாக ....**

மற்றொரு பாடத்தை குறித்தும் பார்ப்போமா?

இஸ்ரவேலர்கள் அடிமைகளாகி இருந்த காலம் முடிந்து எகிப்திலிருந்து வெளியே வரும் போது தேவன் அவர்களை வழி நடத்தினார், எப்படி வழிநடத்தினார் என்று பார்ப்போமானால், அவர்களை தூண் வடிவிலான "மேகங்களை" க் கொண்டு வழி நடத்தினார். வேத எழுத்தாளர் ஒருவர் சொல்லும்போது, (நெகேமியா 9:19)ல் "அவர்களை வழிநடத்தப் பகலிலே மேகஸ்தம்பமும்" என்று கூறுகிறார். சரி, இங்கே "மேகம்" நமக்குக் கற்றுத்தரும் பாடம் என்னவென்று நாம் சிந்திப்போமானால் "**நாம் தேவனைப் பின்பற்ற வேண்டும்**". அவர் எப்பொழுதும் உண்மையுள்ள வழிகாட்டியாக நமக்கு இருப்பார் என்பதுவே.

மேகத்திடமிருந்து சில பாடங்களை இம்மாதம் கற்றுக் கொண்ட நாம் தேவனுக்குச் சித்தமானால் அடுத்த மாதமும் சில பாடங்களைக் கற்றுக்கொள்வோம். நம்மை நேசிக்கிற தேவன் நமக்குத் தரும் பாடங்களை கற்றுக் கடைபிடித்து அவருக்கு உண்மையாக வாழ்வோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்! †

## “ துருவின் சாட்சி ” நூலில் இருந்து
## பாடம் - 9 துருவின் சாட்சி

# கொடுத்தல் திராவகப் பரிசோதனை போன்றது

### நோக்கம்

**கா**ணிக்கை கொடுத்தல், ஒரு மனிதர் கிறிஸ்துவுக்கும், அவருடைய சபைக்கும் எவ்வளவு உண்மையானவராக இருக்கிறார் என்பதை வெளிப்படுத்தும் மிகப்பெரிய சோதனை என்பதை உணர்ந்து கொள்ள உதவுவது.

### உங்கள் சிந்தனைக்கு

தன்னால் இழக்க முடியாததை ஆதாயப்படுத்தும்படி, தன்னால் காக்க முடியாததைக் கொடுப்பவன் ஒன்றும் அறியாதவனல்ல.

### முன்னுரை

நாம் வாழும் இந்தக் காலகட்டம், நாம் பயன்படுத்தும் வாகனம், தொலைக்காட்சிப் பெட்டி, கம்ப்யூட்டர் ஆகிய அனைத்தும் அவ்வளவு ஏன் நாம் உடுத்தும் ஆடை, காலணிகள் போன்றவைகள் கூட சோதிக்கப்பட்ட பிறகே விற்பனைக்கு வரும் காலமாயிருக்கிறது. உண்மையில், எல்லாமே ஒன்றுக்கு, இரண்டு முறை அல்ல, பல முறையும், இன்னும் சில உபகரணங்கள் மிக அதிகமான அளவிலும் சோதிக்கப்படுகின்றன. முதலீடு செய்பவரின் நலன் பாதுகாக்கப்படும்படியாக இவ்வாறு செய்யப்படுகிறது.

தேவன் நம்மை ஏன் சோதிக்கிறார் என்பதைப் புரிந்து கொள்வது எப்பொழுதும் சுலபமானதல்ல. ஆனால், தேவன் மனிதனை சோதித்ததற்கான நிறைய உதாரணங்கள் வேதாகமத்தில் உண்டு. சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான். (யாக் 1:12)

ஆதியாகமம் 22-ம் அதிகாரத்தில், ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை பலி செலுத்துவது சம்பந்தமாக நாம் வாசிக்கிறோம். ஆபிரகாமின் வாழ்க்கையில் இது மிகப் பெரிய சோதனை என்பதில் சந்தேகமில்லை. இச்சோதனையில் ஆபிரகாம் மிக நேர்த்தியாக வெற்றி பெற்றார்.

யோபு புத்தகம் 1 ம் அதிகாரத்தில் யோபு சந்தித்த மிகப் பெரிய சோதனையை நாம் பார்க்கிறோம். குலை நடுங்க வைக்கும் அச்சோதனையில், அவன் எப்படி உறுதி காட்டி, இரட்டிப்பான ஆசீர்வாதம் பெற்றான் என்று படிக்கிறோம். எந்த ஒரு கட்டத்திலும், அவன் தேவனுடைய வார்த்தையை சந்தேகிக்கவே இல்லை.

இன்றைக்கு தேவன் நம்மை பல வழிகளில் அல்லது வகைகளில் சோதிக்கலாம். ஆனால், எந்த ஒரு சந்தேகமுமில்லாமல், கர்த்தருடைய சபையாருக்கும் அநேக கிறிஸ்தவர்களுக்கும் நம்முடைய வருமானத்திலிருந்து கர்த்தருக்குத் தாராளமாய்க் கொடுப்பது ஒரு முக்கியமான சோதனையாகவே உள்ளது.

## III கொடுத்தல் நம்முடைய விசுவாசத்திற்கான ஒரு சோதனை

நான் வளர்ந்த எங்கள் பகுதியில், அநேக ஜனங்களுக்கு ஞானஸ்நானமும், கர்த்தருடைய பந்தியும் கிறிஸ்தவத்திற்கான ஒரு சோதனையாக இருந்தது. மதம் சம்பந்தமாக இவைகள் பற்றித் தான் நான் கேட்டிருக்கிறேன். நான் வளர்ந்த பகுதியிலிருந்த சகோதரர்களுள் ஒரு கூட்டத்தார், பணம் பற்றி அல்லது கொடுத்தல் பற்றி யார் பிரசங்கித்தாலும், தங்கள் புருவங்களை உயர்த்தி முறைத்துப் பார்த்து, பிரசங்கிப்பவருக்கு மரண பயத்தை உண்டாக்கி விடுவார்கள். ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாகட்டும். சகோதரர்களில் சிலர், குற்றச்சாட்டுகள் பற்றி கவலைப்படாமல் ஞானஸ்நானம் பற்றி எப்படிப் பிரசங்கித்தார்களோ அதுபோல, கர்த்தருக்குக் கொடுத்தல் பற்றிய உண்மையையும் பிரசங்கித்தார்கள்.

ஆபிரகாமின் விசுவாசத்தை சோதிக்க தேவன் விரும்பிய போது, ஆபிரகாமுடைய குமாரனைக் கொடுக்கும்படியாக தேவன் கேட்டார். தேவன், தன் குமாரனையே கேட்டிருந்தாலும் கூட, அவனை பலியாகக் கொடுக்க விருப்பமுற்று, தேவன் பேரில் தனக்கிருக்கும் விசுவாசத்தை நிரூபித்தான். இந்த ஆபிரகாமின் விசுவாசம் பற்றிப் பவுல் இவ்விதம் பேசியுள்ளார். தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் (ரோமர். 4:21).

ஒரு கிறிஸ்தவன் தன் வருமானத்திலிருந்து தாராளமாக கொடுக்காமலிருப்பதற்கான அடிப்படை காரணம், அவன் பெலவீனமான விசுவாசமே. இந்த விசுவாச பெலவீனம் நம்மைக் காலங்காலமாகப் பிடித்திருக்கிறது. நம்முடைய இரட்சகர், தம்முடைய சீடர்களின் பெலவீனமான (அற்ப) விசுவாசத்திற்காக பலமுறை அவர் அவர்களைக் கடிந்து கொண்டார். மத்தேயு 6 ஆம் அதிகாரத்தில், அவருடைய சீடர்கள், என்னத்தை உண்போம். என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுத்துவோம் என்று மிகவும் கவலைப்பட்டிருக்கிறார்கள். இது நம்முடைய நிலையை பிரதிபலிப்பதாக இல்லையா? அவர்களைப் பார்த்து, இயேசு, உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளர்கிறதென்று கவனித்துப் பாருங்கள் அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை என்றாலும் சாலமோன்

முதலாய் தன் சர்வ மகிமையி லும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்த தில்லையென்று உங்களுக்குச் சொல்லுகின்றேன். அற்ப விசுவாசிகளே, இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும், கட்டுப் புல்லுக் குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது, அதிக நிச்சய மல்லவா? என்கிறார் (மத். 6:28-30).

மத்தேயு 8 ஆம் அதிகா ரத்தில், பெருங்காற்றுக்கு மத்தி யில் இயேசு நித்திரையாயிருந் ததை நாம் படிக்கிறோம். அவரு டைய சீடர்கள் பயந்து அவரை எழுப்பி மடிந்து போகிறோம் என்றார்கள். அதற்கு அவர் அற்ப விசுவாசிகளே! ஏன் பயப் படுகிறீர்கள் என்று சொல்லி எழுந்து, காற்றையும், கடலை யும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று (மத். 8:23-27) மேலும், மத். 14:25-31 வசனப் பகுதியில், இயேசு கடலின் மீது நடந்து சீடர்களிடம் சென்றார். இயேசு தண்ணீரின் மேல் நடந்து வருகி றதை பேதுரு கண்ட போது, ஆண்டவரே, நீரேயானால் நான் ஜலத்தின் மீது நடந்து உம் மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றார். பிறகு காற்று பலமா யிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்து போகையில் ஆண்ட வரே, என்னை இரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து அற்ப விசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய் என்றார். மத். 16: 5-8 வசனப் பகுதியில், இயேசு, புளித்த மாவாகிய பரிசேயர், சதுசேயர் என்பவர் களைக் குறித்து எச்சரிக்கையா யிருங்கள் என்று தன்னுடைய சீடர்களுக்கு எச்சரித்தார். அவரு டைய சீடர்கள் மிகுந்த மாம்ச சிந்தையுடையவர்களாயிருந்து, வயிற்றுக்கான போஜனம் கொண்டு வராதபடியால் இப்ப டிப் போகிறார் என்று தங்களுக் குள்ளே யோசனைப் பண்ணி னார்கள். இயேசு அதை அறிந்து அற்ப விசுவாசிகளே அப்பங்க ளைக் கொண்டு வராததை குறித்து நீங்கள் உங்களுக்குள் ளே யோசனை பண்ணுகிற தென்ன? என்றார் (16:8).

ஒருவர் தேவன் கொடுத் துள்ள வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கும் போதுதான், அவர் கர்த்தருக்குக் கொடுப் பதில் தாராளமுள்ளவராயிருப் பார். ஒருவர் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவா சிக்க ஆரம்பித்து விட்டால், அவர் கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய அளவு கொடுக்கா மல் அவரிடத்திலிருந்து திருடு வதை நியாயப்படுத்த காரணங் களை தேடமாட்டார். வேதாக மம் போத்திக்கிறபடி ஒருவர் கொடுக்காமலிருக்கும் போது அதை நியாயப்படுத்த அவர் பல காரணங்களைத் தேடி அலைவார்.

## II கொடுத்தல் நம்முடைய அன்பிற்கான ஒரு சோதனை

தேவனுடைய அன்பின் மேன்மைப் பற்றி ஒரு மனிதனு டைய மனம் உணர வேண்டு மென்று முயற்சிக்கும் போது,

யோவான் 3:16ஐ நாம் வாசித்துக் காட்டலாம். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். தன் குமாரனைத் தந்து இவ்வளவாய் அன்புகூர்ந்தார் என்பதை நாம் இங்கே வலியுறுத்துகிறோம். ஒரு குடும்பத்தில் உள்ள தகப்பன் தான் குடும்பத்தில் அன்பு கூறுகிறேன் என்பதைத் தன் உழைப்பாலும், தியாகத்தாலும் நிருபிக்கிறார். ஒரு மனிதன் தான் சம்பாதிக்கும் பணத்தை எடுத்து, தன் குடும்பத்தின் தேவைகளுக்கு செலவிடாமல் மற்றவர்களுக்கு செலவழிக்கும் போது, அவன் தன் குடும்பத்தின் மீது கொண்டிருக்கும் அன்பைக் குறித்து என்ன சொல்வது? அந்த மனிதன் தன் குடும்பத்தை நேசிப்பதாக நீங்கள் நினைப்பீர்களா? நாம் தேவனையும் அவருடைய காரியங்களையும் நேசிக்கக் கற்றுக் கொள்ளும் போது தான், அவருக்குக் கொடுப்பதில் நாம் தாராளமாக இருக்க முடியும். ஆத்துமாவில் இழந்து போனவர்களாக காணப்படுபவர்கள் மீது நாம் கொண்டிருக்கும் அன்பினிமித்தமே நாம் நம்முடைய பணத்தைக் கொடுக்கிறோம். அப்படிக் கொடுப்பதின் மூலம் சுவிசேஷம் அநேகருக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

ஒரு சமயம் ஒரு பிரசங்கியார் ஒரு குறிப்பிட்ட சபையில் தான் ஆப்பிரிக்காவுக்கு திரும்பிச் சென்று அவர்கள் இரட்சிக்கப்படும்படியாய் அவர்களுக்காக மரித்த இயேசுவைக் குறித்து பிரசங்கம் செய்ய, சிறப்பு காணிக்கை கொடுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார். சபையின் மூப்பர்கள் சிறப்புக் காணிக்கைக்கு அனுமதி கொடுத்தனர். ஒரு உதவிக்காரர் காணிக்கை பையை சபையாருக்கு மத்தியில் கொண்டு சென்ற போது, அச்சபையில் நீண்ட காலமாக அங்கம் வகிக்கும், அதே சமயம், ஒரு போதும் கர்த்தருக்காக தாராளமாகக் கொடுக்காத முதியவர் ஒருவர், நாடு கடந்தும் செய்யும் ஊழியப் பணியில் தனக்கு நம்பிக்கையில்லை என்றார். அப்பொழுது உதவிக்காரர், அப்படியானால், காணிக்கைப் பையிலிருந்து கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள். இப்பணம் சத்தியம் அறியாதவர்களுக்கு என்றார். ஒவ்வொரு சகோதரனும், ஏதாகிலும் கொடுக்கிறவர்களாகவோ அல்லது எடுக்கிறவர்களாகவோ உள்ளோம். ஒருவருடைய கொடுத்தல் அவருடைய அன்புக்கு எடுத்துக் காட்டாக உள்ளது. ஒரு மனிதனுக்கு, தேவன், அவருடைய சபை, இழந்து போனவர்கள், அநாதைகள் மற்றும் அஞ்ஞானிகள் போன்றோரின் மீது அன்பில்லை என்றால், உற்சாகமாகக் கொடுக்கும்படி எதுவுமே அவனைத் தூண்டாது. ✝

(தொடரும்)

(தொடர் கட்டுரை)

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

K. பாஸ்கர்

## பாடம் - 9. சபையின் ஆளுகை அமைப்பு

திருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த தொடர் கட்டுரை மூலமாக இம்மாதமும் உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நாம் சபையின் ஆளுகை அமைப்பைக் குறித்து அறிந்து கொள்வது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஏனென்றால், இன்றைக்கு நூற்றுக்கணக்கான சபைகள் தோன்றி இருக்கிறது. அந்தந்த சபைகளுக்கு ஆளுகை அமைப்பு வித்தியாசமாக இருக்கின்றது. அவைகள் புதிய ஏற்பாடு போதிக்கும் ஆளுகை அமைப்பைப் பெற்றிருக்கவில்லை!. அவர்களுக்கு சபை கோட்பாடு புத்தகம் ஒன்றிருக்கிறது அதைத் தான் போதிக்கின்றனர்! ஆனால் நாம் புதிய ஏற்பாட்டைத் தவிர வேறு எதுவும் படிக்கப்போவதில்லை. சபையின் ஆளுகை அமைப்பைக் குறித்து புதிய ஏற்பாடு என்ன போதிக்கின்றதோ அதை மட்டும் படிப்போம். அதன் மூலமாக வசனம் ரீதியான கிறிஸ்துவின் சபையை அடையாளம் தெரிந்து கொள்வோமாக.

### I ஆளுகை என்றால் என்ன?

ஆளுகை என்றால் ஆட்சி செலுத்து, ஆளுகின்றவர், அதிகாரத்தில் உள்ளவர், தலைமை வகிப்பவர் என்று பொருள் படும். தேவன் இஸ்ரவேலர்களை முதலாவதாக ஆட்சி செய்தார். அந்த ஆட்சி ஆவிக்குரியதாக இருந்தது. பரலோகத்திலிருந்து அவர்களை ஆட்சி செலுத்தினார். ஆனால், இஸ்ரவேலர்கள் அதை அறியவில்லை! ஆதலால், சரீரப்பிரகாரமான, கண்களினால் காணக்கூடிய ஆட்சியை விரும்பினார்கள். எனவே, சாமுவேல் தீர்க்கதரிசியிடம் தங்களின் விருப்பத்தை தெரிவித்தனர். அவர்களின் தவறான விருப்பத்தைக் கேட்ட சாமுவேல் மிகவும வேதனையடைந்தார். மனம் நொந்து தேவனிடம் விண்ணப்பம் பண்ணினார். அப்பொழுது கர்த்தர் சாமுவேலை நோக்கி ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக்கேள். அவர்கள் உன்னைத்தள்ளவில்லை நான் அவர்களை ஆளாதபடிக்கு என்னைத்தான் தள்ளினார்கள் (1 சாமு. 8:6,7) என்றார். தேவன் பரலோகத்திலிருந்து ஆட்சி செய்வதை இஸ்ரவேலர்கள் அறியவில்லை. அவர்களுக்காக அவர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து சிவந்த

சமுத்திரத்தை இரண்டாகப் பிளக்கச் செய்து அவர்களை வழி நடத்தினார். தேவன் அவர்களுக்கு ராஜாவாக செயல்பட்டு அவர் களுக்காக அவர் யுத்தம் பண்ணினார். அவர்கள் சும்மாயிருக்கும் படி கூறினார் (யாத். 14:14). இதையெல்லாம் அவர்கள் அறிந்து கொள்ளவில்லை! ஆதலால் கண்களினால் காணக்கூடிய ஆட்சி யை விரும்பினார்கள். ஒரு ராஜா இருந்தால் அவர் எப்படி தம்மு டைய ஜனங்களை பாதுகாப்பாரோ அதைவிட பலமடங்கு அதிக மாகவே தேவன் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்தார். எப்படி யென்றால், வனாந்தரத்திலே பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினி ஸ்தம்பமும் அவர் களுக்கு தேவன் வைத்தார். அவர்கள் வனாந்தரத்தில் விதைக்காமல், அறுவடை செய்யாமல் தேவனால் போஷிக்கப்பட்டனர். அவர்களுடைய வஸ்திரம் பழையதாய் போகவில்லை, கிழியவுமில்லை. பாதரட்சையும் சேதமாகவில்லை. இப்படியாக இஸ்ரவேலரை தேவன் ஆட்சி செலுத்தினார்.

இஸ்ரவேலர் மனிதனை நம்பினார்கள். மனிதனுடைய ஆளுகையை விரும்பினார்கள். சவுல், தாவீது, சாலமோன் என்ப வர்கள் தலா நாற்பது ஆண்டுகள் ஆளுகை செய்தார்கள். அவர் களில் தாவீது ராஜா மட்டும் தேவனுக்கு பிரியமாய் நடந்து கொண்டு ஆளுகை செய்தார். (அப். 13:22) சவுல் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை (1சாமு. 15:22,23) சாலமோன் அந்நிய நுகத்தில் திருமண ஒப்பந்தம் செய்து விக்கிரக ஆராதனைக்கு உடன்பட்டார். (1இராஜ 11:1-6) சாலமோனுக்குப் பிறகு ஐக்கிய ராஜ்யம் பிளவுபட்டது. இஸ்ரவேல் ராஜ்யம், யூதா இராஜ்யம் எனப் பிரிந்தது. இந்த பிளவுபட்ட ராஜ்யத்தின் முடிவு இஸ்ரவேல் ராஜ்யத்தை அசீரியா ராஜா சிறைபிடித்து சென்றுவிட்டார். பத்துக் கோத்திரத்தைச் சார்ந்த இஸ்ரவேலர் மீண்டுமாக அடிமை களாக்கப்பட்டார்கள். (2இராஜ 17:6) யூதா இராஜ்யத்தை பாபிலோன் இராஜா நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்கு சிறை பிடித்துச் சென்றார். இரண்டு கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் பாபிலோனிலே மீண்டுமாக அடிமையாக்கப்பட்டார்கள்! (2 இராஜா 24:11-16) மனிதனின் ஆளுகை நீடிக்கவில்லை மீண்டு மாக அவர்கள் அடிமைகளாக்கப்பட்டார்கள்.

### II சபையும், அதன் ஆளுகையும்

இஸ்ரவேலர்கள் மனிதனுடைய ஆளுகையை விரும்பினார் கள். அதன் முடிவு பாபிலோன் தேசத்தில் 70 ஆண்டுகள் அடிமை களாக இருந்தார்கள். அதன்பின்பு, பாபிலோனிலிருந்து கர்த்தர் விடுவித்து பாலஸ்தீன தேசத்தில் அதாவது அவர்களின் சொந்த பூமிக்கு திரும்பி வந்து குடியமர்த்தப்பட்டனர். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ரோம சாம்ராஜ்ஜியத்தின் நாட்களில் பிறந்தார். அவரது பிறப்பின் நோக்கத்தை தேவதூதன் கூறுகையில் அவர்

பெரியவராயிருப்பார் உன்னதமானவருடைய குமாரன் எனப்படுவார் கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார் அவருடைய இராஜ்ஜியத்திற்கு முடிவிராது என்றான் (லூக். 1:32, 33).

அதன்படி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு வந்தார். அவர் பாடுபட்டு சிலுவையிலே மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, பரலோகம் சென்று பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்தார் (மாற்கு 16:19) தேவ தூதர்களும், அதிகாரமும், வல்லமையும் அவருக்குக் கீழ்ப் படிந்திருக்கிறது. (1பேதுரு 3:22) அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் இருக்கிறார் (1தீமோ 6:15). ஆகவே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து இரட்சிக்கப் படுகிறவர்களை ஆளுகின்றார். இது ஆவிக்குரிய ஆளுகையா யிருக்கின்றது.

கிறிஸ்துவின் ஆளுகையானது பரலோகத்திற்குரியவை களோடு பூலோகத்தையும் இணைக்கின்றது. எப்படியென்றால், இயேசு கிறிஸ்து பேதுருவிடம், "*மேலும் நான் உனக்குச் சொல்கி றேன். நீ பேதுருவாய் இருக்கிறாய் இந்த கல்லின் மேல் என் சபை யைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வ தில்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன். பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத் திலும் கட்டப்பட்டு இருக்கும். பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்*". (மத். 16:18,19) அவரது ஆளுகையின் கீழ் சபை கட்டப்பட்டிருக்கின்றது. சபையிலே விசுவாசமுள்ளவர்கள் எவர் களோ அவர்கள் பரலோகத்திலும் பெயர் எழுதப்பட்டவர்களாக காணப்படுகிறார்கள். (வெளி. 3:5) கிறிஸ்தவர்கள் அனைவரும் கிறிஸ்துவுக்குள் ஒரு உறவைப் பெற்றிருக்கின்றோம். மூப்பர்கள், உதவிக்காரர்கள், பிரசங்கியார்கள் என்ற உறவைப் பெற்றிருக் கின்றோம்.

சபைக்கான ஆளுகையைக் குறித்து தேவன் ஒரு ஒழுங்கை வைத்திருக்கின்றார். சகலமும் நல்லொழுக்கமாயும், கிரகமமாயும் செய்யப்படக்கடவது (1கொரி. 14:40) என்ற வசனத்தின்படி பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு சுவிசேஷ ஊழியத் தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் சிலரை அப்போஸ்தல ராகவும், சிலரைத் தீர்க்கத்தரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகரா கவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்

(எபே. 4:12,13). இன்று அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் இல்லை ஆனால், அப்போஸ்தலருடைய உபதேசமும், தீர்க்கதரிசன வசனமும் உண்டு. அதன்படி சுவிசேஷ ஊழியர்கள், மேய்ப்பர் கள், போதகர்கள் இருக்க வேண்டும். இவர்களைக் கொண்டு சபைக்கான ஆளுகைகளை வைத்துள்ளார். வசன ரீதியான கிறிஸ்துவின் சபையில் சுவிசேஷகர்கள், மூப்பர்கள், உதவிக்காரர் கள், போதகர்கள் நியமிக்கப்பட வேண்டும். அப்போஸ்தலனா கிய பவுல் இளம் பிரசங்கியர்களுக்கு கொடுத்த கட்டளை நீ குறைவாய் இருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கு பட்ட ணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்த வேண்டும் என கட்டளை யிட்டிருக்கின்றார் (தீத்து. 1:5).

மேலும், இயேசு பட்டணத்து சபை மூப்பர்களை வர வழைத்து அவர்களுக்கு தேவன் கொடுத்திருக்கும் பொறுப்பை விவரிக்கின்றார். இங்கே மூப்பர்கள் என்பது முதியவரைக் குறிக் கிறது. அவர்களின் பொறுப்பானது சபையை மேய்க்க வேண்டும். மற்றும் கண்காணிக்க வேண்டும் என்று கூறுகின்றார். (அப். 20:31,28) இங்கே மூப்பர்கள் தான் மேய்ப்பர்கள் என்றும் மேய்ப்பர்கள் தான் கண்காணிகள் என்றும் விளக்கப்பட்டிருக் கிறது. ஆனால், இன்று இந்த மூவரும் தனித்தனி ஆளாக பிரித்து பட்டங்களை கொடுக்கின்றார்கள். இது முற்றிலும் வேதத்திற்கு முரணான செயலாகும். மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைகள் இப்படிப்பட்ட முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. ஒரு பாஸ்டர் ஒரு சபைக்கு அதிகாரியாகவும், ஒரு பிஷப் ஒரு மாவட் டத்திலுள்ள சபைகளுக்கு அதிகாரியாகவும் இருக்கின்றார். அவர் களுக்கு தலைமை பாஸ்டர், தலைமை பிஷப் மேலாளராக நியமிக்கப்படுகின்றனர். அந்த சபைக்கு தலைவர், போப், ரெவரெண்டு போன்றவர்கள் இருக்கின்றார்கள்.

ஆனால், வேத வசனப்படி உள்ளூரில் உள்ள ஒரு சபையில் மூப்பர்கள், உதவிக்காரர்கள் மற்றும் ஊழியர்கள் இருந்துள்ளனர் (பிலி. 1:1; அப். 20:31,28) சபையின் ஆளுகை அமைப்பு வேத வசனப்படி இருக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள், உதவிக்காரர்கள் ஒரு சபையில் இருக்க வேண்டும். இந்த அமைப் பை நாம் பின்பற்ற வேண்டும். மற்றபடி பொருளாளர், செயலா ளர், கமிட்டி உறுப்பினர்கள் போன்றவர்கள் வேதத்தில் இல்லாத வைகள் நாம் வேதத்தில் இல்லாத காரியங்களுக்கு முக்கியத் துவம் கொடுக்கக்கூடாது. அப்படிக் கொடுக்கும் போது சபையின் முக்கிய நோக்கமான சுவிசேஷம் சொல்வது தடையாகி விடும், சபை பரிசுத்தத்தை இழக்கும் அபாயம் வந்து விடும், பண ஆசை, பொருளாசை, பதவி ஆசை போன்றவற்றால் வாக்குவாதமும், சண்டைகளும் உருவாகிவிடும். எனவே, சபை பூரணத்தை நோக்கி வளரவேண்டுமென்றால் மூப்பர்கள், உதவிக்காரர்கள் நியமிக்க

வேண்டும். அதற்காக நாம் எல்லாரும் அல்லது அனைத்துக் கிறிஸ்தவர்களும் அந்த தகுதியம்சங்களை பெற்றுக் கொள்ள வாஞ்சையுள்ளவர்களாக இருந்து ஆளுகை அமைப்பை காத்திடு வோம்.

### III சபை ஆளுகையின் நோக்கம்

இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து சபையாரை ஆளுகை செய்கின்றார். அவரது ஆளுகையின் நோக்கம் ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்புகின்றார். (2பேதுரு. 3:9) எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும், சத்தியத்தை அறிகின்ற அறிவு பெற்றுக் கொள்ள வேண்டும் (1 தீமோ. 2:4) சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும் இதுவே நோக்கமாக இருக்கின்றது. (எபே. 4:12,13) மூப்பர்கள், உதவிக்காரர்கள் எதற்காக நியமிக்க வேண்டும் என்றால் சுவிசேஷ வேலைக்காக மற்றும் சபை பக்தி விருத்தி அடைவதற் காகவும் தேவன் இந்த ஆளுகைகளை வைத்துள்ளார் என்பதை புரிந்து கொண்டு நாம் அனைவரும் செயல்பட வேண்டும்.

சுவிசேஷம் அறிவிக்கப்படுவதற்காகவே வாரத்தின் முதல் நாளில் சேர்க்கப்படும் காணிக்கையானது இருக்க வேண்டும் (1கொரி. 16:1-3), (பிலி. 4:15,16) இது பிரதானமான நோக்கமாக இருக்க வேண்டும். மற்றபடி திக்கற்ற பிள்ளைகள், விதவைகளுக்கும் (யாக். 1:27) சபையின் பக்தி விருத்திக்காக வும் சபையின் பொருளாதாரம் செயல்பட வேண்டும் இந்த வேலைகள் எல்லாம் அப்படியே விட்டு விட்டு பணத்தை வங்கி யிலே சேர்த்து வைப்பது வேதத்திற்கு முரண்பாடாக உள்ளது (லூக்கா 12:20) தேவனுக்கு பணமோ, பொருளோ அல்லது சபை கட்டிடமோ அவசியமில்லை! விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் தான் மிகவும் அவசியம் (மத். 16:26) இந்த ஆவிக்குரிய அறிவு நம் அனைவருக்கும் இருக்க வேண்டும். சபையின் பொருளா தாரக் காரியங்களில் வளர்ச்சி அடையாத நூதன சீஷர்களை நியமனம் செய்யும்பொழுதுதான் பிரச்சனை உருவாகுகின்றது எனவே, அவசரப்படாமல் சபை பெருமையுடன் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ந்து பக்குவமடையும் வரை காத்திருக்க வேண்டும். அதுவரை சபையின் காரியங்கள் அனைத்தும் ஊழியக்காரரே பொறுப்பாக இருக்கின்றார். (எபி. 13:17) அவசரப்பட்டு வேதத்திலில்லாத காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டால் தேவனுடைய முக்கிய நோக்கம் நிறை வேறாமல் போகும்! எனவே சபையின் ஆளுகை அமைப்பைப் புரிந்து கொண்டு செயல்படுவோமாக. ✝

(தொடரும்)

# மன்னிப்பும், ராஜ்யமும்

(மத்தேயு 18:15-35)

***Gary C. Hampton***

**தனக்கு விரோதமாக பாவஞ்செய்கிற மற்றவர்களுக்கு கிறிஸ்தவனுடைய பதில் : -**

மனித உறவுகளில் சாதாரணமாக ஒருவர் மற்றவருக்கு விரோதமாக பாவஞ் செய்வதுண்டு. குற்றத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர் தனக்கு விரோதமாக குற்றம் செய்தவனிடத்தில் போய் அவனை மீட்டமைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று இயேசு அறிவுறுத்தினார். இது யூத மதக்குருக்களின் போதனைகளுக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தது. அவர்கள், யார் குற்றம் செய்தார்களோ அவர்கள், சாட்சிகளுக்கு முன்பாக பாதிக்கப்பட்டவர்களிடத்தில் தங்கள் தவறை சரி செய்ய வேண்டும் என்ற போதித்தார்கள். சில வேளைகளில், குற்றம் செய்தவர்கள் இவ் விதமாக மூன்று முறை செய்ய வேண்டுமென்று யூத மத குருக்கள் சொல்வார்கள். இங்கே நாம் கவனித்தால் மதகுருக்கள் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்காக அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. மாறாக, குற்றம் செய்தவர்களை தாழ்மைப்படுத்தி, இழிவுப்படுத்துவதே அவர்கள் நோக்கமாயிருந்தது. நிச்சயமாக, குற்றம் செய்தவர் தன் குற்றத்தை உணர்ந்தால், அவனும் பிரச்சனையைச் சரிப்படுத்த கடமைப்பட்டிருக்கிறான் (மத். 5:23,24).

**என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனை தரம் மன்னிக்க வேண்டும்?**

கர்த்தருடைய உபதேசத்திற்கு பேருதுவின் பதில், கர்த்தருடைய அன்பின் இருதயத்தைப் பேதுரு சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. “**Edershein**” என்பவருடைய கூற்றுப்படி, மூன்று முறைக்கு மேல் மன்னிப்பு வழங்கப்படக்கூடாது என்று யூத ரபீக்கள் போதித்திருக்கிறார்கள். எனவே, பேதுரு தன் சகோதரனை ஏழுதரம் மன்னிக்க வேண்டுமோ? என்று கேட்டதினால், தான் சற்று தாராளமாக இருப்பதாக ஒருவேளை நினைத்திருக்கலாம். ஆயினும், இயேசுவின் பதில், அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் எவ்வளவு அன்பும், அக்கறையும் உடையவராயிருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. அப்படி மன்னிக்கும் அன்பான இருதயம் இருக்குமானால் தவறை எத்தனை தரம் மன்னிக்க வேண்டும் என்கிற கேள்வியே எழும்பாது.

உண்மையாகவே, கிறிஸ்தவனுடைய மன்னிக்கும் எல்லை தேவனுடைய மன்னிக்கும் எல்லையைப் போலிருக்க வேண்டும். தேவனுடைய பிள்ளைகள் பிதாவின் அன்பை வெளிப்படுத்தப் பாடுபட வேண்டும் (மத்தேயு 5:43-48). இத்தகைய சிந்தை இயேசு சொன்ன உவமைகளின் பின் இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

**தேவனுடைய ஆச்சரியமான கிருபை**

இயேசு சொன்ன இந்த உவமையில் வரும் ராஜா தேவனாயிருக்கிறார். இங்கே இந்த ராஜா தன் வேலைக்காரர்களை கணக்கொப்புவிக்கும்படி கேட்டுக் கொண்டார். ராஜாவுக்கு முன்பாக பத்தாயிரம் தாலந்துகள் கடன்பட்டவனைக் கொண்டு வந்தார்கள். ஒரு தாலந்து என்பது தங்கத்தில் தோராயமாக நூற்றிமுப்பத்தொன்று பவுண்டுகள் எடையுடைய காசுகளாக இருந்திருக் கிறது அல்லது வெள்ளியில் நூற்றிப்பதினேழு பவுண்டுகள் எடையுடைய காசுகளாக இருந்திருக்கிறது. வேறுவிதமாகச் சொன்னால் இந்தக் கடன் மிகப்பெரிய தொகையாக இருந்திருக்கிறது.

“எடர்ஷீன் என்பவர், இவ்விதமாகச் சொன்னார். அவருடையவைகளை நிர்வகிக்கும்படியாக நம்மிடம் ஒப்புக்கொடுத்திருக்கிற பரலோகப் பிதாவிற்கு நாம் எல்லோரும் கடனாளிகளாக இருக்கிறோம், நாம் கொள்ளையடித்தது, தவறாகப் பயன்படுத்தியது போன்றவைகளைச் சேர்த்துப் பார்த்தால் சொல்லமுடியாத அளவுக்குக் கடன்பட்டிருக்கிறோம், அவைகளை நம்மால் திருப்பிச் செலுத்தவே முடியாது. அவர் தொடர்ந்து நம்மை விடுவிக்கும்படியாக சுவிசேஷத்தை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

மனித இனத்தின்மீது தேவனுடைய ஆச்சரியமான அன்பு, அந்த அளவு மிகப்பெரிய கடனை மன்னிப்பதற்கு ராஜா விருப்பம் தெரிவித்ததில் தெரிகிறது. இஸ்ரவேலரின் பாடகர் இவ்விதமாகப் பாடினார். “*மேற்குக்கும், கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்*” (சங்கீதம் 103:12). அவர் தொடர்ந்து இவ்விதமாகச் சொல்கிறார். “*இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்ப தாக; கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு*” (சங்கீதம் 130:7). நாம் அவருக்குக் கீழ்ப்படிந்தால் பாவத்தின் ஆழமான கறைகளை அவர் முற்றிலுமாக எடுத்துப் போட சித்தமுள்ளவராயிருக்கிறார். மனந்திரும்ப விரும்பி ஞானஸ்நானத்தின் மூலமாக புதிய மனிதனாக மாற விரும்புபவர்களின் பாவங்களை முற்றிலுமாகக் கழுவுவதாக தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். கிறிஸ்துவுக்குள்ளிருந்து தன் பாவங்களை அறிக்கையிடுபவர்களை உண்மையாக மன்னிப்பதாக அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (அப்போஸ்தலர் 3:19; 1 யோவான் 1:9).

## இரக்கமற்ற வேலைக்காரன்

அந்த வேலைக்காரன், ராஜா தனக்கு என்ன செய்தார் என்பதை முழுமையாக உணர்ந்து கொள்ளவில்லை. அது தன்னுடைய சக வேலைக்காரன் தனக்குச் செலுத்த வேண்டிய சிறிய தொகையை அவனிடத்தில் பலவந்தமாய்க் கேட்டதிலிருந்து தெரிகிறது. அந்த சக வேலைக்காரன் இவன் ராஜாவினிடத்தில் விடுத்த அதே வேணடுகோளையே விடுத்தான். இருந்தபோதிலும், இவன் சக வேலைக்காரனுக்கு பணத் துடன் வருவதற்கு நேரத்தைக்கூட கொடுக்கவில்லை, அவனைக் கடனாளி களின் காவலில் போட்டுவிட்டான்.

இந்த வேலைக்காரனின் செயல்பாட்டைப் பார்த்து, மற்ற சக வேலைக்காரர்கள் அதிர்ச்சி அடைந்து நடந்ததை ராஜாவிடம் அறிவித்திருக்கிறார்கள். இங்கே இந்த மனிதனுடைய கண்ணிலிருந்து உத்திரம் ராஜாவின் இரக்கத்தால் எடுக்கப்பட்டதை உணராதவனாக இவன் காணப்பட்டான். இங்கே இந்த மனிதன் தன் சக வேலைக்காரனுடைய துரும்பை எடுத்திருக்கிறான் (மத். 7:1-5). கடிந்து கொள்வதற்குப் பதிலாக இவன் அவனை மன்னித்திருக்க வேண்டும். இப்படியிருக்கிறபடியால், தேவனால் மன்னிக்கப்படுகிறவர்கள் பிறரை மன்னிக்கிறவர்களாக இருக்க வேண்டும் (மத். 6:12,14,15). பவுல் எபேசு பட்டணத்து சகோதரர்களுக்கு சொல்லும்போது இவ்விதமாகச் சொன்னார். *ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மனித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்* (எபே. 4:32).

## மன்னிக்காத மனதுக்கு தேவனுடைய பதில்

நடந்தவைகளை ராஜா கேட்டபோது கடுங்கோபங் கொண்டான். தான் அந்த வேலைக்காரனுக்கு மனித்தது போலஅவனும் மன்னிக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். அந்த வேலைக்காரன் அப்படிச் செய்யாததினால் அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். இவ்வளவு பெரிய கடன் தொகையை அந்த வேலைக்காரன் அந்த சிறைச் சாலைச் சுவர்களுக்குள்ளிருந்து எப்படி திருப்பிச் செலுத்த முடியும் என்பதை கற்பனை செய்து பாருங்கள்!

அது பாடுகள் நிறைந்த நித்திய தண்டனையாயிருக்கும். அப்படியே இயேசு *நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால் என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்* என்றார்

(மத்தேயு 18:35). ஏனென்றால், நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய பார்வையில் பாவம் செய்திருக்கிறோம். நம் பாவங்கள் நித்திய மரணத்திற்கு பாத்திரமானவைகள் (ரோமர் 3:10,23; 6:23). ஆயினும், நம் பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்கும் படியாக தேவன் சொல்லமுடியாத ஈவாகிய அவருடைய குமாரனை நமக்காக அந்த கல்வாரி சிலுவையில் ஒப்புக் கொடுத்தார் (II கொரி. 9:15; யோவான் 3:1617) "நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்" (ஏசாயா 53: 6). நிச்சயமாக, இத்தகைய மாபெரும் கடனிலிருந்து நம்மை




தேவன் விடுவித்ததற்கு நன்றி செலுத்தும் விதமாக நாம் நமக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்களை மன்னிக்க வேண்டும். †

## மனிதனை இரட்சிப்பதற்கான தேவனுடைய திட்டம்

1. தேவனுடைய கிருபை – எபேசியர் 2:8
2. கிறிஸ்துவின் இரத்தம் – ரோமர் 5:9
3. பரிசுத்த ஆவியானவரின் வார்த்தை – II தீமோத்தேயு 3:16,17
4. பாவியின் விசுவாசம் – அப்போஸ்தலர் 16:31
5. பாவியின் அறிக்கை – ரோமர் 10:10
6. பாவியின ஞானஸ்நானம் – I பேதுரு 3:21
7. கிறிஸ்தவனின் கிரியை – யாக்கோபு 2:24
8. கிறிஸ்தவனின் நம்பிக்கை – ரோமர் 8:24
9. கிறிஸ்தவனின் நிலைத்து நிற்கும் தன்மை – மத்தேயு 24:13

# BIBLE MEDITATION

## TV PROGRAM




**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : **சகோ. பிலேமோன் ராஜா,** மதுரை.

| | | | |
|---|---|---|---|
| பொதிகை | TV | சனி | காலை 5:30 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | காலை 7:45 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு 10:00 மணி |

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : **சகோ. அர்ச்சுனன்,** வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| தமிழன் | TV | சனி | காலை 6:15 மணி |





**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |


Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment No: TN / WR / ERD / 03 / WPP / 2009-20111




( தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் )

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை TV | ஞாயிறு | காலை | 5:30 | மணி |
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.